රාජ්‍ය පරිපාලන හා කළමනාකරණ අමාත්‍යාංශය
# பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு
# MINISTRY OF PUBLIC ADMINISTRATION AND MANAGEMENT

ඒකාබද්ධ සේවා අංශය **இணைந்த சேவைகள் பிரிவு** **COMBINED SERVICES DIVISION**

නිදහස් චතුරශ්‍රය, කොළඹ 07, ශ්‍රී ලංකාව. சுதந்திரச் சதுக்கம், கொழும்பு 07, இலங்கை. Independence Square, Colombo 07, Sri Lanka

| දුරකතනය<br>தொலைபேசி: **(94) 011- 2694560**<br>Telephone | ෆැක්ස්<br>தொலைநகல்: **(94) 011- 2692254**<br>Fax | ඊ-මේල්<br>மின்னஞ்சல்: **dgcs@pubad.gov.lk**<br>E-mail | වෙබ් අඩවිය<br>இணையத்தளம்: **www.pubad.gov.lk**<br>Web Site |
|---|---|---|---|

---

| මගේ අංකය<br>எனது இல<br>My No | CS/DOS/01/11 | ඔබේ අංකය<br>உமது இல<br>Your No | | දිනය<br>திகதி:<br>Date | 2017.08.14 |
|---|---|---|---|---|---|

அனைத்து அமைச்சு செயலாளர்கள்/

அனைத்து திணைக்களத் தலைவர்கள்/

மாவட்ட செயலாளர்கள்/

பிரதேச செயலாளர்களிற்கு

**<u>அபிவிருத்தி உத்தியோகத்தர் தொடர்பான கடிதங்களை இணைந்த சேவைகள் பிரிவிற்கு அனுப்புதல்</u>**

அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையிலுள்ள 50000 எண்ணிக்கையளவிலான பெயர்வழிக் கோப்புகளுக்குரிய பல்வேறு அலுவலக செயற்பாடுகள் இணைந்த சேவைகள் பிரிவின் மூலம் நடைபெறுகின்ற அதேவேளை நாளாந்தம் பெருமளவிலான கடிதங்கள் இப்பிரிவிற்கு கிடைக்கப் பெறுகிறது. அக்கோவைகளுக்குரிய கணனிமயப்படுத்தப்பட்ட தரவுத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுவதோடு, பிரிவிற்கு கிடைக்கும் கடிதங்களுக்கான பெயர்வழிக் கோவைகள் தெரிவு செய்யப்படுவது குறித்த தரவுப்படுத்திய முறைமையினூடாகும்.

அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் தொடர்பாக எமக்கு கிடைக்கப்பெறும் கடிதங்கள் பெருமளவில் உத்தியோகத்தரின் பெயர் மாத்திரம் குறிப்பிட்டிருப்பதுடன் குறித்த பெயரை மாத்திரம் பயன்படுத்தி தரவுத்திட்டத்தில் ஆய்வு செய்யும் போது ஒரே பெயர் கொண்ட உத்தியோகத்தர்கள் ஒன்றிற்கு மேற்பட்டவர்கள் இருக்கும் வேளையில் குறித்த கோவையை கண்டெடுப்பது தொடர்பாக சிக்கல்கள் தோன்றுகின்றதோடு உரிய நபருடைய கோவையை தரவுப்பத்திரத்தில் கண்டுபிடிக்க நீண்ட காலத்தை செலவளிக்க வேண்டியுள்ளது. இப் பிரச்சினையை நிவர்த்தி செய்வதற்காக அபிவிருத்தி உத்தியோகத்தர் தொடர்பான கடிதங்களை அனுப்புகையில் கட்டாயமாக உத்தியோகத்தரின் நியமனக் கடித இலக்கத்தை **CS/DOS/XXXXX** குறிப்பிட நடவடிக்கை எடுக்கும்படி உரிய உத்தியோகத்தர்களுக்கு அறியத் தருமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

இது தொடர்பான உமது ஒத்துழைப்பை பெரிதும் மதிக்கிறேன்.

ஒப்பம்./ கே.வீ.பீ.எம்.ஜே. கமகே
இணைந்த சேவைகள் பணிப்பளர் நாயகம்